**வேளாண் பல்கலை.க்கு சர்தார் படேல் விருது**

First Published : 20 Jul 2011 11:41:03 AM IST

கோவை, ஜூலை 19: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2010-ம் ஆண்டுக்கான சர்தார் படேல் தன்னிகரற்ற நிறுவன விருது வழங்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் அண்மையில் நடைபெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் நிறுவன நாள் மற்றும் விருது வழங்கும் விழாவில், மத்திய வேளாண்மை மற்றும் உணவுப் பதனிடும் தொழில்துறை அமைச்சர் சரத்பவார் இந்த விருதை வழங்கினார். பல்கலை துணைவேந்தர் ப.முருகேச பூபதி பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 756 பயிர் ரகங்களையும், 149 பண்ணைக் கருவிகளையும் மேலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மேலாண்மைத் தொழில்நுட்பங்களையும் விவசாயிகள் நலன் கருதி வெளியிட்டுள்ளது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் மற்றும் வேளாண்மையில் நானோ தொழில்நுட்ப பயன்பாடுகள் குறித்த நுட்பமான ஆராய்ச்சிக்காக, நாட்டிலேயே முதன்முறையாக நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்காக தனித்துறையை நிறுவியுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் வட்டார அளவில் தானியங்கி வானிலை ஆய்வு மையங்களை நிறுவி குறுகிய கால வானிலை முன்னறிவிப்பினை வழங்கி வருகிறது. துல்லிய பண்ணை திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இதுபோன்ற சேவைகளைப் பாராட்டி "சர்தார் படேல் தன்னிகரற்ற விருது' வழங்கப்பட்டுள்ளது.

**சலிப்பு தரும் நெல் விவசாயம் : சலுகைகள் கோரும் விவசாயிகள்**

First Published : 20 Jul 2011 03:10:47 AM IST

கடலூர், ஜூலை 19: தொடர்ந்து நெல் விவசாயம் செய்ய வேண்டுமா என்ற சலிப்பு, தமிழக நெல் விவசாயிகளிடையே ஏற்பட்டு உள்ளது. தமிழ்நாட்டில் நெல் பயிரிடும் பரப்பளவும் நெல் உற்பத்தியும், நெல் விவசாயத்துக்கான ஆர்வமும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இந்த நிலையை மாற்ற நெல் விவசாயிகளுக்கு அரசு மேலும் சலுகைகளை அளிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



2010-11-ம் ஆண்டில் 21.5 லட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யத் திட்டமிட்டு 20.71 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது. 81.5 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு 71.5 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப் பட்டது.

கடலூர் மாவட்டத்தில் சம்பா உள்ளிட்ட அனைத்து பருவங்களிலும் 3.5 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப் படுகிறது.

தமிழகத்தின் மிகப்பெரிய சாகுபடியான சம்பா நெல் சாகுபடிப் பணிகள், தமிழகம் முழுவதும் இன்னும் ஒரு மாதத்தில் தொடங்க இருக்கிறது. காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் 16 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்படுகிறது. டெல்டா பாசன நெல் சாகுடி பெரும்பாலும், கர்நாடகத்தில் பெய்யும் மழையின் அளவையும், கர்நாடக அரசின் பெருந்தன்மையின் அளவையும் பொறுத்ததாக மாறியிருக்கிறது.

நெல் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகரித்து வரும் நிலையில், நியாயமான விலை கிடைக்கவில்லை என்பது விவசாயிகளின் கருத்து. அத்துடன் கடந்த சில ஆண்டுகளாக கிராமப்புற வேலை உறுதித்திட்டத்தால், விவசாய வேலைகளுக்கு ஆள்கள் கிடைப்பது இல்லை என்பது விவசாயிகளை பெரிதும் கவலையில் ஆழ்த்தி வருகிறது. இதனால் விவசாயக் குடும்பங்களின் அடுத்த தலைமுறை, விவசாயத்தை விட்டு வெளியேறும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

தமிழகத்தில் நெல் உற்பத்தி குறைந்த போதிலும் மக்களுக்குத் தேவையான அரிசி கர்நாடக, ஆந்திர மாநிலங்களில் இருந்து வந்துவிடுவதால், உற்பத்திக் குறைவு பற்றி அரசு, அதிகம் சிந்திக்கும் நிலையில் இல்லை. ஆனால் நெல் விவசாயிகளுக்கோ, இதை விட்டால் வேறு வழியில்லை என்ற பரிதாபநிலை. டெல்டா பாசனப் பகுதிகளில் நெல்லை விட்டால் வேறு பயிர்களை பயிரிட முடியாத நிலை. இதனால் எத்தனை கஷ்ட நஷ்டம் ஏற்பட்டாலும், ஆள் பற்றாக் குறை என்றாலும் விவசாயம் செய்தே ஆகவேண்டிய நிர்பந்தம், நெல் விவசாயிகளை பெரிதும் சலிப்பில் ஆழ்த்தி இருக்கிறது.

சம்பா அறுவடை காலத்தில் நெல் விலை, நல்ல தரமான காய்ந்த நிலையில் அரசு நிர்ணய விலையான ரூ. 1100-ஐ விட, சற்றும் உயரவில்லை. மாறாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கொஞ்சம் ஈரப்பதம், கொஞ்சம் தரம் குறைவான நெல் குண்டால் ரூ. 600-க்கும் ரூ. 700-க்கும் அடிமாட்டு விலைக்கு தனியார் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப் பட்டது. சம்பா அறுவடை காலத்தில் பொன்னி புழுங்கல் அரிசி, கிலோ ரூ. 24 முதல் ரூ. 28 வரை இருந்தது, தற்போது ரூ. 28 முதல் ரூ. 32 வரை என உயர்ந்து இருக்கிறது. ஆனால் நெல்விலை இன்னமும் அடிமட்டத்திலேயே உள்ளது என்கிறார்கள் விவசாயிகள்.

6 மாத சம்பா நெல் சாகுபடிக்கு ஏக்கருக்கு ஆகும் செலவு சுமார் ரூ. 15 ஆயிரம். அதில் இருந்து கிடைக்கும் நெல்லின் விலை ரூ. 18 ஆயிரம். ஒரு ஏக்கர் நிலம் வைத்து இருக்கும் நெல் விவசாயிக்கு 6 மாதத்துக்கு ரூ. 3 ஆயிரம்தான் வருமானம் வருகிறது என்கிறார்கள் விவசாயிகள்.

இதுகுறித்து காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத் துணைத் தலைவர் கே.வி. கண்ணன் கூறுகையில், "கடந்த 10 ஆண்டுகளில் வேளாண் கருவிகளுக்குப் பயன்படும் டீசல் விலை 300 சதவீதமும், பூச்சி கொல்லி மருந்துகள் விலை 150 சதவீதமும், தொழிலாளர்களின் ஊதியம் 200 சதவீதமும், உரத்தின் விலை 45 சதவீதமும் உயர்ந்து இருக்கும் நிலையில், நெல் விலை 35 சதவீதம் மட்டுமே உயர்ந்து இருக்கிறது. இந்த நிலையில் எப்படி நெல் விவசாயம் செய்ய முடியும் என்று சலிப்புதான் ஏற்படுகிறது. 100 நாள் வேலைத்திட்டம் வேளாண்மையில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே கேரளா, கர்நாடகா மாநிலங்களைப் போல் தமிழகத்திலும், 100 நாள் வேலைத் திட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்களை, வேளாண் பணிகளுக்குத் திருப்ப வேண்டும். அரசு வழங்கும் கூலி போக மீதியை விவசாயிகள் வழங்குவர். வெட்டிய ஏரியை, வாய்க்காலை மீண்டும் மீண்டும் வெட்டிப் பயனில்லை' என்றார் அவர்.

மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி. ரவீந்திரன் கூறுகையில், "பிற மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்குள் நெல் கொண்டுவர அனுமதிக்கக் கூடாது. நெல்லுக்கான ஆதார விலையை உயர்த்த வேண்டும். பாதிக்கப்படும் ஒவ்வொரு விவசாயியும் இழப்பீடு பெறும் வகையில், பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இயந்திரங்களை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில், வாய்க்கால் ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு, இயந்திரங்கள் சென்றுவர சாலை வசதியை மேம்படுத்த வேண்டும்' என்றார்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

First Published : 20 Jul 2011 03:51:08 AM IST



மேட்டூர், ஜூலை 19: மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு விநாடிக்கு 15 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 23,839 கன அடியாக அதிகரித்துள்ளது. மேலும், அங்கு தொடர்ந்து மழை பெய்து வருவதால் கபினி அணையின் பாதுகாப்பைக் கருதி காவிரியில் விநாடிக்கு 27,375 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதேபோல, கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்தும் விநாடிக்கு 3,980 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், மேட்டூர் அணையின் நீர் வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை விநாடிக்கு 6,917 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த தண்ணீர், மாலை 4 மணிக்கு 15,118 கன அடியாக அதிகரித்துள்ளது. கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளின் திறப்பால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து 30 ஆயிரம் கன அடி வரை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தினமலர்

**நெல் தரிசில் சாம்பல் பூசணிக்காய் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2011,00:00 IST



பத்தடிக்கு பத்தடி இடைவெளியில் இரண்டு முதல் இரண்டரை அடி விட்டமும், ஒன்பது அங்குலம் ஆழமுள்ள குழிகள் போடவேண்டும். மக்கிய தொழு உரம் குழிக்கு ஒரு கூடை வீதம் கொட்டி மண்ணோடு நன்றாக கலக்கும்படி கொத்திவிட வேண்டும். ஒரு ஏக்கரில் நட 3,200 முதல் 3500 விதைகள் தேவைப்படும்.

விதையை ஆழமாக ஊன்றக்கூடாது. ஆழம் முக்கால் அங்குலத்திற்கு அதிகமாக போகக்கூடாது. ஒரு குழியில் நான்கு அல்லது ஐந்து செடிகள் வளரும்படி பணிகளை செய்துகொள்ள வேண்டும். உயிர் தண்ணீர் விட வேண்டும். உயிர் தண்ணீர் விட்டு 15 நாட்கள் தொடர்ந்து தண்ணீர் விடவேண்டும்.

விதை நட்ட 25ம் நாளிலிருந்து 30 நாட்களுக்குள் முதல் உரம் வைக்க வேண்டும். குழியிலுள்ள களைச்செடிகளை நன்றாக கொத்தி எடுத்து உரம் வைத்து பாசனம் செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் உரம் 30 கிலோ 17:17:17 காம்ப்ளக்ஸ், 10 கிலோ யூரியா இவற்றை நன்கு கலந்து பின் 100 கிராம் அளவு கலவையை ஒரு குழிக்கு வைக்க வேண்டும். விதை நட்ட 45 அல்லது 50வது நாள் குழி ஒன்றுக்கு 200 கிராம் 17:17:17 காம்ப்ளக்ஸ் உரம் மட்டும் வைக்க வேண்டும்.

விதை நட்ட 35ம் நாள் செடி நன்றாக படர்ந்து கொடி ஓடும். இந்தக்கொடிகள் பூமியின் மீது ஓடும்போது கணுக்களிலிருந்து வெளிவரும் வேர்கள் பூமியில் இறங்கி நிலத்தை இறுகப்பிடித்துக்கொள்ளும். கொடிகள் வளமாக நிலத்தை தழுவி வளரும்போதுதான் செடி சீராக பூ, பிஞ்சுகள் விடும். நெல் வயலை உழாத சூழ்நிலையில் தரை கெட்டியாக இருக்கும். இதனால் கணுக்களிலிருந்து வேர் வெளிவந்தால் அவைகளால் நிலத்தினுள் இறங்க முடியாது. இதுசமயம் நிலத்தினை கொத்தி மிருதுவாக்கி கொடியின் கணுவை அதில் வைத்து மேலே மண் தள்ளி மூடி கைகளால் லேசாக அழுத்திவிட வேண்டும். இப்பணி பதியன் போடுதல் என்று அழைக்கப் படுகின்றது.

செடி நட்ட 40 நாட்கள் கழித்து நஞ்சை வயல் முழுவதும் நன்கு நனையும்படி ஓர் உருட்டுத்தண்ணீர் பாசனம் செய்யலாம். இப்பணி செடியிலிருந்து பூ, பிஞ்சுகள் கொட்டிவிடுவதை தவிர்த்துவிடுகின்றது. நஞ்சை நிலத்தில் பாசனம் செய்ததால் களைச்செடிகள் வளர்ந்து

மெத்தைபோல் தளத்தை அமைத்துவிட்டது. இதன்மேல் உட்கார்ந்த பிஞ்சு, காய்கள் உஷ்ணத்தால் பாதிக்கப்படாமல் இருந்தன. காய்களின் மேல் சூரிய வெளிச்சம் படாமல் குடைபிடித்தது போன்று களைச்செடிகள் இருந்தன. காய்களின்மீது சூரிய படை விழாமல் செய்கின்றது. காய்கள் தழும்பில்லாமல் சுத்தமாக இருந்ததால் விற்பனை பிரச்னை தவிர்க்கப்பட்டது.
வண்டுகள் விழக்கூடிய வாய்ப்பு உண்டு. இதைத்தடுக்க மெட்டாசிஸ்டாக்ஸ் அடிக்கலாம். அசரை விழுந்தால் ரோகர் 200 மில்லிஅடிக்கலாம். விவசாயிகளுக்கு ஒரு எச்சரிக்கை யாதெனில் பி.எச்.சி. மருந்து கண்டிப்பாக அடிக்கக் கூடாது. இதைத் தூவினால் செடி பட்டுப்போய்விடும்.
**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**சின்ன வெங்காயம் -கோ.ஓ.என்.5**

பதிவு செய்த நாள் : ஜுலை 20,2011,00:00 IST

**நவீன தொழில்நுட்பம்**
தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தின் காய்கறித் துறையினரால் சமீபத்தில் வெளியிடப்பட்ட கோ.ஓ.என்.5 என்ற ரகம் விதைமூலம் இனவிருத்தி செய்யப்படுகிறது.
**நாற்றங்கால் தயாரிப்பு**: ஒரு எக்டர் நடவு செய்ய 7 கிலோ விதை தேவைப்படும்.
மேட்டுப்பாத்தியில் நாற்றங்கால்விட நிலத்தை நன்கு உழவு செய்து 3 அடி அகலம், அரை அடி உயரம், 10 அடி நீளம் கொண்ட மேட்டுப்பாத்திகள் அமைத்து 2 கிலோ டி.ஏ.பி., மக்கிய தொழு உரம் இட்டு எறும்பு முதலான பூச்சிகளிடமிருந்து விதைகளைக் காப்பாற்ற லின்டேன் பவுடரை பாத்திகளின் மேல் தூவ வேண்டும். விதைகளை அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரத்துடன் ஒரு கிலோ விதைக்கு 100 கிராம் அளவில் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். பின் மேட்டுப்பாத்திகளில் 3 செ.மீ. இடைவெளியில் 2 செ.மீ. ஆழத்தில் கோடுகள் இழுத்து, அதில் விதைகளை வரிசையாக விதைத்து வைக்கோல் கொண்டு மூடி, பின் பூ வாளி கொண்டு காலை, மாலை இரு வேளையும் நீரைப்பாய்ச்சி பராமரிக்க வேண்டும். விதைத்த 8-10 நாட்களில் விதை முளைத்தவுடன் புல் போர்வையை நீக்கி 40-45 நாட்கள் வரை பராமரித்து, பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் (ரோகார்) மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மிலி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.
**நடவு வயல் தயாரிப்பு**: புழுதிபட உழுது, ஒரு ஏக்கருக்கு 2 மூடை டி.ஏ.பி., 10 டன் மக்கிய தொழு உரம், கடைசி உழவில் களை பறித்து, 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நட்டவுடனும் பின் 5 நாட்களுக்கு ஒருமுறையும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.
பெண்டிமெத்திலின் களைக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் 5 மிலி என்ற அளவில் நாற்று நடுவதற்கு 2 நாட்களுக்கு முன்பே தெளிக்க வேண்டும். ஒரு மாத இடைவெளியில் பின்னர் 2 முறை கைக்களை எடுக்க வேண்டும்.
மேலுரமாக ஒரு மூடை யூரியா, 2 மூடை 10:26:26 காம்ப்ளக்ஸ் உரத்தை நடவுசெய்த 30வது

நாளில் களை எடுத்தபின் இடவேண்டும். 60வது நாள் மீண்டும் ஒரு முறை களை எடுத்து, ஒரு மூடை யூரியா, 2 மூடை பொட்டாஷ் இடவேண்டும். வெங்காயம் பருமனடையும் பருவத்தில் மண்ணின் ஈரம் குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நடவிலிருந்து அறுவடை வரை 18-20 முறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

**அறுவடை**: அறுவடைக்கு ஒரு மாதத்திற்கு முன் நீர்ப்பாசனத்தை நிறுத்திவிட வேண்டும். பயிரின் 75 சதவீதம் இலைகள் வாடியவுடன் வெங்காயத்தை தோண்டி எடுக்கலாம். பயிர் நடவு செய்த 90 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். ஏக்கருக்கு 7 டன் வெங்காயம் விளைச்சல் எடுத்துள்ளார் அனுபவ விவசாயி, சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஆர்.ராஜா. (தகவல்: பெ.ச.கவிதா, ம.அ.வெண்ணிலா, செ.மாணிக்கம், வேளாண்மை அறிவியல் நிலையம், அந்தியூர், சேலம். 90470 65335)-**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**திசுவளர்ப்பில் இரண்டாவது பேரீச்சை விவசாயியின் வெற்றிக்கதை**

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2011,00:00 IST



திருப்பூர் மாவட்டம், முருகம் பாளையத்தில் வசிக்கும் விவசாயி முருகவேல். தமிழகத்தில் பேரீச்சையை திசுவளர்ப்பு முறையில் வெற்றிகரமாக இரண்டாவது விவசாயியாக உரு வெடுத்துள்ளார். அவர் கடந்த 2008ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தினமலர் நாளிதழில் வெளியிட்டுள்ள விவசாயமலர் கட்டுரையில் திண்டுக்கல் மாவட்ட விவசாயி அன்பழகன் தோட்டத்திற்கு சென்று அவரது அனுபவம் மூலம் பேரீச்சை சாகுபடி செய்துள்ளார்.

2.5 ஏக்கரில் 200 திசுவளர்ப்பு பேரீச்சை கன்றுகளை, 2009 பிப்ரவரியில் முருகவேல் நடவு செய்தார். இஸ்ரேல் தொழில்நுட்ப முறையில் வளர்த்தார். ஒரு பேரீச்சை மரம் பழங்களை கொடுக்க குறைந்தது மூன்றாண்டாகும். ஆனால் இவரது பண்ணையில் 28 மாதங்களிலேயே பழங்களை கொடுத்துள்ளது.

ஒரு ஏக்கரில் சுமார் 60 கன்றுகளை நடலாம். குறைந்தது எட்டு மீட்டர் இடைவெளி இருக்க

வேண்டும். 30 டிகிரி செல்சியஸ் வெப்பமே போதுமானது. வடிகால் வசதி உள்ள இடங்களில் மட்டுமே பேரீச்சை வளரும். பேரீச்சையில் டேனின் என்னும் வேதிப்பொருள் அதிகமாக இருப்பதால் அதை அப்படியே சாப்பிட முடிவதில்லை. எனவே, பதப்படுத்தப்பட்ட பழங்களே சந்தைக்கு வருகின்றன. ஆனால் திசு வளர்ப்பு முறையில் உரு வாக்கப்படும் பர்ரி ரக பேரீச்சைகளை அப்படியே சாப்பிடலாம். ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பரில் மட்டும்தான் இவை காய்க்கும்.

ஒரு கன்று நட ரூ.3,500 வரை செலவு செய்தேன். மரமாக வளர்வ தற்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவழித்துள்ளேன். முதலாண்டில் ஒரு மரத்தில் 40 முதல் 50 கிலோ வரை பழங்கள் காய்க்கும். மரம் 75 ஆண்டுகளுக்கு மேல் வாழும். மரம் வளர வளர காய்க்கும் பழங்களின் எடை அதிகரிக்கும். இந்த பழங்கள் கிலோ 350 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன.

பேரீச்சை உண்பதன் நன்மைகள்: பர்ரி பேரீச்சையில் எளிதில் செரிமாணம் ஆகக்கூடிய நார்ச்சத்து மற்றும் கார்போஹைட்ரேட் இயற்கையாகவே அதிகமாக உள்ளது. ஆழ்ந்த உறக்கத்திற்கு துணைபுரிகிறது. சோர்வை களைகிறது.

ஒரு வேளைக்கு 2 பழம் வீதம் 30 நாட்கள் வரை தொடர்ந்து உண்பதால் மாதவிடாய் குறைபாடுகள் நீங்கும். நல்ல கண்பார்வை கிடைக்கும்.

**தொடர்புக்கு:** முருகவேல், முருகம்பாளையம், மங்கலம்-641 663. போன்: 0421-234 6055, மொபைல்: 98651 50040, 98651 50060.**-கே.சத்யபிரபா, உடுமலை.**

**விவசாயிகளுக்கு சிறு தானிய பயிருக்கான பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2011,01:52 IST

தா.பேட்டை: தா.பேட்டை வட்டார வேளாண் விரிவாக்க மையம் சார்பில் வாளசிராமணி பஞ்சாயத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் சிறு தானிய பயிர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சி முகாமிற்கு உதவி அலுவலர் செந்தில்குமார் வரவேற்றார். பஞ்சாயத்து தலைவர் (பொ) அப்துல்கபூர் தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குனர் சந்திரசேகரன் விதை கிராம திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார். வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) ராஜசேகரன் விதை உற்பத்தி, சேமித்தல் குறித்தும், வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் தீவிர சிறுதானிய உற்பத்தி திட்டம் பற்றியும், உதவி வேளாண்மை அலுவலர் சாமிநாதன் சாகுபடி தொழில் நுட்பம் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்து பேசினார். மேலும், தமிழக அரசின் சிறப்பு திட்டத்தில் சிறு குறு வி வசாயிகள் வாரியாக அடிப்படை புள்ளி விபரம் கொண்டனர். இதில் வேளாண்மை உதவி அலுவலர்கள் அசோக்குமார், மனுவேல், ரேவதி, ரவி, விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர். துணை வேளாண் அலுவலர் சேவியர் சவுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

**கபினியில் 27,500 கன அடி நீர்திறப்பு மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2011,02:16 IST

மேட்டூர்: கர்நாடகாவில் உள்ள கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து, விநாடிக்கு, 31 ஆயிரத்து, 500 கனஅடி நீர் காவிரியில் திறக்கப்பட்டதால், மளமளவென சரிந்து வந்த மேட்டூர் அணை நீர்மட்டம் மீண்டும் உயர துவங்கியுள்ளது.
ஜூன் 6ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம், 116 அடியாகவும், நீர் இருப்பு, 87 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. டெல்டா பாசனத்துக்கு அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டதால் கடந்த, 44 நாளில் அணையில், 42 டி.எம்.சி., நீர் குறைந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் நேற்று முன்தினம் விநாடிக்கு, 26 ஆயிரத்து, 500 கனஅடியாக இருந்த கே.ஆர்.எஸ்., நீர்வரத்து நேற்று, 28 ஆயிரத்து, 300 கனஅடியாகவும் அதிகரித்தது. விநாடிக்கு, 22 ஆயிரத்து, 75 கனஅடியாக இருந்த கபினி நீர்வரத்து நேற்று விநாடிக்கு, 24 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. கே.ஆர்.எஸ்.,ல், 4,000 கனஅடி, கபினியில், 27 ஆயிரத்து, 500 கனஅடி என, இரு அணைகளில் இருந்தும் விநாடிக்கு, 31 ஆயிரத்து, 500 கனஅடி நீர் காவிரில் திறக்கப்பட்டுள்ளது. இந்த நீர் மேட்டூர் அணைக்கு நாளை வந்துசேரும். அதனால், மேட்டூர் அணை நீர்வரத்து மேலும் அதிகரிக்கும். கபினி உபரி நீர்திறப்பால் நேற்று முன்தினம் விநாடிக்கு, 6,500 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று மாலை விநாடிக்கு, 15 ஆயிரத்து, 118 கனஅடியாக அதிகரித்தது. நீர்திறப்பை விட நீர்வரத்து அதிகரித்ததால் நேற்று மதியம், 82.890 அடியாக இருந்த நீர்மட்டம் மாலை, 83 அடியாக உயர்ந்தது.

**பால் பொருட்கள் தயாரிப்பு நிறுவனத்தில் திடீர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2011,02:30 IST

ப.வேலூர்: தனியார் பால் பொருள் தயாரிப்பு நிறுவனத்தில், மாவட்ட சுகாதாரப் பணிகள் துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு செய்து, சோதனைக்கு மாதிரி எடுத்து அனுப்பியுள்ளனர்.ப.வேலூர் அருகே கந்தம்பாளையம், மணியனூர் ஆகிய இடங்களில் ஆறு தனியார் பால் நிறுவனம் உள்ளது. அங்கு வெண்ணெய், நெய் உள்ளிட்ட பால் பொருள் உற்பத்தி செய்து, உள்ளூர் மற்றும் வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.
அந்த நிறுவனங்களில் நேற்று, மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநரின் நேர்முக உதவியாளர் வீரமலை தலைமையில், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலைய அதிகாரிகள் சுப்ரமணி, சிவசண்முகம் ஆகியோர் திடீர் ஆய்வு செய்தனர்.ஆறு நிறுவனங்களில் இருந்தும், மாதிரி பால் பொருட்களை மாதிரி எடுத்து சோதனைக்காக ஆய்வகத்துக்கு அனுப்பினர். "பால் பொருள்

உற்பத்தியில் குறைபாடு இருப்பது தெரியவந்தால், சம்மந்தப்பட்ட நிறுவனத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என, சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் நேர்முக உதவியாளர் வீரமலை தெரிவித்தார். மேலும், சுகாதாரமான முறையில் பால் பொருள் விற்பனை செய்யும்படியும், அந்நிறுவனத்தாருக்கு அதிகாரிகள் அறிவுரை வழங்கினர்.

**நெகமம், ஆனைமலையில் கொப்பரை ஏலம் விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,21:34 IST

ஆனைமலை : நெகமம், ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக தலா ரூ.52.60, ரூ.52.40 விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 7 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 20 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் மூன்று வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 18 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 50.20 ரூபாய் முதல், அதிகபட்சம் 52.60 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 2 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 30 ரூபாய் முதல், அதிகபட்சம் 43 ரூபாய் வரை விலை கிடைத்தது.ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 56 பேர் 106 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை நான்கு வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) தமிழ்செல்வன் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 64 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 50.60 ரூபாய் முதல் அதிகபட்சமாக 52.40 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 42 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 37.50 ரூபாய் முதல் அதிகபட்சமாக 49.05 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், வெளிமார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய், கொப்பரை போன்றவற்றின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. முதல் தரகொப்பரை விலை கிலோவுக்கு 5 ரூபாய் அதிகரித்துள்ளது. இரண்டாம் தர கொப்பரை 4 ரூபாய் விலை அதிகரித்துள்ளது என்றனர்.

**வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை குறைந்தது பருப்பு, முட்டை, பூ விலையிலும் சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,21:59 IST

திருப்பூர் : வரத்து அதிகரித்துள்ளதால், சந்தையில் காய்கறி விலை குறைந் துள்ளது. தக்காளி வரத்து அதிகரிப்பால், கடந்தவாரத்தை விட கிலோவுக்கு நான்கு ரூபாய் தக்காளி விலை

குறைந்தது. நேற்றைய மார்க்கெட் நிலவரம்: தக்காளி ரூ. 6; கத்தரி 12; சின்னவெங்காயம் 16 முதல் 22 ரூபாய் வரை, பெரியவெங்காயம் 16; வெண்டை 12; புடலை 12; பீர்க்கன்காய் 15; அவரை 18; பாகல் 18; சுரைக்காய் 5; அரசாணி, பூசணி ரூ. 8; பச்சைமிளகாய் (குண்டு) 30, (சம்பா) 20; பீட்ரூட் 16; காரட் 28; பீன்ஸ் 20; முள்ளங்கி 12; உருளைகிழங்கு 16; கோஸ் 10; பொரியல் தட்டை 16; பூண்டு 100; இஞ்சி 40; மேரக்காய் 20; எலுமிச்சை 40; கீரை 10; கறிவேப்பிலை 15; கொத்துமல்லி 10; காலிபிளவர் 20; புதினா 15; சேனைக்கிழங்கு 20 ரூபாய்.வடக்கு உழவர்சந்தை நிர்வாக அலுவலர் ராமலிங்கம் கூறியதாவது: பெருமாநல்லூர், அவிநாசி, தெக்கலூர், சேவூர் ஆகிய பகுதிகளில் இருந் தும், பெங்களூரு, மைசூரு, ஊட்டியில் இருந்தும் சந்தைக்கு காய்கறி வரத்து அதிக ரித்துள்ளது. இதனால், காய்கறி விலை கிலோவுக்கு 2 ரூபாய் முதல் 4 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது; வரும் நாட்களில் இன்னும் விலை குறைய வாய்ப்புள்ளது, என்றார். தட்டைபயறு விலை குறைவு:மார்க்கெட்டுக்கு தட்டை பயறு வரத்து அதிகரித்துள்ளதால், விலை கிலோவுக்கு இரண்டு ரூபாய் குறைந்துள்ளது. துவரை, பாசிபருப்பு விலை கடந்த வாரத்தைவிட இரண்டு ரூபாய் அதிகரித்துள்ளது. தட்டைபயறு 40 ரூபாய்; துவரம் பருப்பு 52; பாசிபருப்பு 62; கொண்டைகடலை (வெள்ளை) 62, (கருப்பு) 38; சீரகம் 190; சுக்கு 160; சோம்பு 120; வரமிள காய் 110; பொட்டுகடலை 46; மொச்சை 40; உருட்டு உளுந்து 70; கருப்பு உளுந்து 62; கடலை பருப்பு 38; வடை பருப்பு 26; பச்சை பட்டாணி 26; எள்ளு 60; கடுகு 40; வெந்தயம் 45; புளி (முதல்தரம்) 110, இரண்டாம் தரம் 85 ரூபாயாக நேற்று மளிகை பொருட்கள் விலை நிலவரம் காணப்பட்டது. முட்டை விலையும் குறைந்தது:வெளியூர் ஏற்றுமதி குறைந்துள்ளதால், உள்ளூர் மார்க்கெட்டுக்கு முட்டை வரத்து அதிகரித்துள்ளது. மொத்த மார்க்கெட்டில் முட்டை விலை ரூ. 2.42; சில்லரை வர்த்தகத்தில் 2.50 முதல் 3 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.மல்லிகை விலை குறைந்தது: பூமார்க்கெட்டில் நேற்று, மல் லிகை 80; முல்லை 80; கனகாம்பரம் 100; அரளி 40; ஜாதிமுல்லை 100 ரூபாய் என பூக்கள் விலை நிலவரம் காணப்பட்டது. வியாபாரி ஒருவர் கூறுகையில், " சத்திய மங்க லம், நிலக்கோட்டை பகுதிகளில் இருந்து மல்லி, முல்லை வரத்து அதிகரித்துள்ளது. பூக்களுக்கான தேவை சற்று குறைந்துள்ளதால், கடந்தவாரத்தை விட கிலோவுக்கு 20 ரூபாய் குறைந்துள்ளது. ஆடிவெள்ளி வரும்போது, அனைத்து பூக்கள் விலை யும் மீண்டும் அதிகரிக்கும்', என்றார்.தங்கம் விலையில் ஏறுமுகம்:ஒருவாரத்தில் தங்கம் விலை கிராமுக்கு 40 ரூபாய்; வெள்ளி ஏழு ரூபாய் விலை உயர்ந்துள்ளது; நேற்றைய நிலவரப்படி, ஒருகிராம் தங்கம் 2,190 ரூபாய்; சவரன் 17,520; வெள்ளி 64.50 ரூபாயாக விலை அதிகரித்து காணப்பட்டது.

**மண்பரிசோதனை செய்து பயிர்கள் சாகுபடி :விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,23:01 IST

சுல்தான்பேட்டை : மண்பரிசோதனை செய்து தகுந்த பயிர்களை சாகுபடி செய்தால், உரச்செலவு குறைவதுடன் மகசூலும் அதிகரிக்கும்என, சுல்தான்பேட்டை வேளாண் துறை, விவசாயிகளுக்கு அறிவுறுத்தி உள்ளது. சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் தக்காளி, மிளகாய், பீட்ரூட், பொரியல்தட்டை, கத்திரி, வெங்காயம், மக்காச்சோளம், காலிபிளவர் மிக அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாய பூமிகளில் மண்பரிசோதனை செய்யாமல் விவசாயம் செய்வதைவிட மண்பரிசோதனை கூடத்தில் 10 ரூபாய் கட்டணம் செலுத்தி மண்பரிசோதனை செய்து மண்ணின் தன்மைக்கு ஏற்றபடி குறிப்பிட்ட பயிர்களை சாகுபடி செய்யலாம்; இதனால் வழக்கத்தைவிட உரச்செலவு குறைவதுடன் மகசூலும் அதிகரிக்கும்.மண்மாதிரி எடுக்கும் விபரம்: வயலில் குறைந்தது 10 இடங்களில் மண் எடுத்து அதனை நன்றாக கலந்து அதில் இருந்து ஒரு மாதிரி எடுக்கவேண்டும். மண்மாதிரி எடுக்கும்போது அந்த இடத்தில் உள்ள இலை, சருகுகளை எடுத்துவிடவேண்டும். நெல், சோளம், மக்காச்சோளம், நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு ஆறு அங்குல ஆழம் வரையிலும்; பருத்தி, கரும்பு, மிளகாய் போன்ற ஆழமான பயிர்களுக்கு ஒன்பது அங்குல ஆழத்திலும், தென்னை மற்றும் பழ மரங்களுக்கு 12, 24, 36, அங்குல ஆழங்களில் மூன்று மண் மாதிரி எடுக்கவேண்டும்.மண்மாதிரி எடுக்கும் ஒவ்வொரு இடத்திலும் ஆங்கில எழுத்தான "வி' வடிவம் வருமாறு குறிப்பிட்ட ஆழத்துக்கு குழிவெட்டி மண்ணை அப்புறப்படுத்தவேண்டும்.வெட்டிய "வி' வடிவ குழியின் ஓரமாக மண்வெட்டியின் தகட்டால் மேல் இருந்து குழியின் ஆழத்துக்கு ஒரு இரும்பு சட்டியில் இடவேண்டும்.இதுபோல் குறைந்தது 10 இடங்களில் சேகரித்த மண்ணை நன்கு கலந்து தூசியை அப்புறப்படுத்தி கட்டிகளை உடைத்து பொடி செய்யவேண்டும். இவ்வாறு சேகரித்த மண் ஈரமாக இருந்தால் நிழலில் உலர்த்தவேண்டும். பின் இம்மண்ணை நான்கு சம பாகமாக பிரித்து எதிர் எதிரில் உள்ள மண்ணை நீக்கி மீதமுள்ள இருபாகத்தினை சேர்க்கவேண்டும். 500 கிராம் எடை வரும்வரை இவ்வாறு செய்யவேண்டும். இதையடுத்து, இம்மண்ணை சுத்தமான ஒரு பையில் போட்டு அத்துடன் மண்மாதிரி விவரத்தினை பூர்த்தி செய்து 10 ரூபாய் கட்டணம் செலுத்தி கோவை லாலிரோட்டில் உள்ள மண்பரிசோதனை ஆய்வகம் அல்லது பல்லடத்தில் உள்ள ஆய்வகத்தில் வழங்க வேண்டும். பரிசோதனை முடிவு ஒரு சில நாட்களில் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும். மண்பரிசோதனை செய்து தகுந்த பயிர்களை சாகுபடி செய்வதால் உரச்செலவு குறைவதுடன், அதிக மகசூலும் பெற முடியும், என சுல்தான்பேட்டை வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

**பசுந்தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க நடவடிக்கை அவசியம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,23:10 IST

ஊட்டி : "தரமான பசுந்தேயிலைக்கு தொழிற்சாலையின் சார்பில் நல்ல விலை கொடுத்தாலும், அவை முறையாக விவசாயிகளுக்கு போய் சேருவதில்லை,' என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட ஜனநாயக சிந்தனையாளர் பேரவை அமைப்பாளர் சதாசிவம், மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனு: நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு நிரந்தர நியாயமான விலை கிடைக்க விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட இயக்கங்கள் மற்றும் குழுவின் ஆலோசனை கூட்டம் கூட்டுவதுடன், மாநில அரசின் சார்பில், மத்திய அரசை வலியுறுத்தி விலை நிர்ணயத்துக்கு வழி வகை செய்ய வேண்டும்; தரமான தேயிலைக்கு தொழிற்சாலைகள் நல்ல விலை கொடுத்தாலும், அவை முறையாக விவசாயிகளுக்கு போய் சேருவதில்லை. பசுந்தேயிலை ஏஜென்ட்கள் குளறுபடி காரணமாக குறைந்த விலையே விவசாயிகளுக்கு கிடைக்கிறது. எனவே, இதில் உள்ள முரண்பாடுகளை களைய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சதாசிவம் கூறியுள்ளார்.

**திருத்திய நெல் சாகுபடி நடவு பணிகள் துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,23:47 IST

கம்பம் : திருந்திய நெல் சாகுபடி முறையில் கம்பம் பகுதியில் நடவு பணிகள் துவங்கியது. கம்பம் பள்ளத்தாக்கில் 14 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இருபோக சாகுபடியில் முதல் போகத்திற்கான நடவு பணிகள் தற்போது துவங்கியுள்ளது. திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு பணிகள் காமயகவுண்டன்பட்டி ரோட்டில் உள்ள வயல்களில் அதிகாரிகள் துவக்கி வைத்தனர். விவசாயத்துறை உதவி இயக்குநர் ராமராஜ், உதவி விவசாய அலுவலர்கள் கஜபதி, மாரிச்சாமி முன்னிலை வகித்தனர். உதவி இயக்குநர் ராமராஜ் கூறுகையில்,"பெரும்பாலான வயல்களில் நடவு பணிகள் துவங்கி விட்டது. பல இடங்களில் நடவு முடிந்துள்ளது. இந்த ஆண்டு நல்ல மகசூல் கிடைக்கும். தேவையான நவீன தொழில்நுட்பங்களை வழங்கி வருகிறோம்,'என்றார்.

தினகரன்

## எத்தியோப்பியாவில் இந்திய சர்க்கரை ஆலை

பதிவு செய்த நாள் : 7/20/2011 0:57:36



அடிஸ் அபாபா: இந்திய நிறுவனம் எத்தியோப்பியாவில் சர்க்கரை ஆலையை தொடங்க திட்டமிட்டுள்ளது. இந்திய தனியார் நிறுவனங்கள் கிழக்கு ஆப்ரிக்க நாடான எத்தியோப்பியாவில் அதிக அளவில் முதலீடு செய்து வருகின்றன. இந்நிலையில் எத்தியோப்பியாவின் ஒரோமியா பகுதியில் 4,000 ஹெக்டர் பரப்பளவில் கரும்பு தோட்டம் மற்றும் புதிய கரும்பு ஆலையை அமைக்க திட்டமிட்டுள்ளோம் என தனியார் நிறுவன மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## உளுந்து அறுவடை தீவிரம்

பதிவு செய்த நாள் : 7/20/2011 0:54:22



கடலூர் : கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே செட்டித்தாங்கல் பகுதியில் உள்ள விவசாயிகள், குறுவை சாகுபடி செய்வதற்கு பதிலாக குறுகிய காலப்பயிரான உளுந்து சாகுபடி செய்திருந்தனர். ஆட்கள் பற்றாக்குறை, தொழிலாளர்கள் சம்பள உயர்வு காரணமாக குறுவை சாகுபடியை விவசாயிகள் தவிர்த்து, குறுகிய கால ரக மாற்றுப்பயிரை பயிரிட முடிவு செய்தனர். அதன்படி கடந்த இரு மாதங்களுக்கு முன்பு உளுந்து பயிரை சாகுபடி செய்தனர். இப்பயிர் 65 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படும். இதன்படி தற்போது அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## விலைவாசி உயர்வால் பொருட்கள் வாங்குவது குறைவு

பதிவு செய்த நாள் : 7/20/2011 0:52:50



புதுடெல்லி : பொருட்களின் விலை உயர்வால் இந்த ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரை பொருட்கள் வாங்குவது குறைந்ததாக ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. இந்திய நுகர்வோரின் மனநிலை குறித்து நீல்சன் நிறுவனம் தொடர்ந்து ஆய்வு நடத்தி முடிவுகளை வெளியிட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் நுகர்வோரின் நம்பிக்கை 131 புள்ளிகளாக இருந்தது. அதாவது, உலகிலேயே வாங்கும் சக்தியில் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக இந்தியர்கள் முதலிடம் பெற்றனர்.

ஏப்ரல் முதல் ஜூன் வரை அடுத்த 3 மாதங்களிலும் உலகின் முதலிடத்தில் இந்தியர்கள் நீடித்தாலும், நுகர்வோர் நம்பிக்கையில் 5 புள்ளிகள் சரிந்தது. அதிக வேலைவாய்ப்பு, தனிப்பட்ட நிதி நிலை ஆகியவை சீராக இருந்தபோதிலும், நுகர்வோரிடம் வாங்கும் தயக்கம் அதிகரித்ததை ஆய்வு காட்டுகிறது.

ஆய்வில் பங்கேற்ற இந்தியர்களில் 56 சதவீதத்தினர் பொருட்களை வாங்க சரியான நேரம் இதுவே என்று தெரிவித்தனர். அதுவே, ஜனவரி & மார்ச் 2011ல் 61 சதவீதத்தினர் இந்த கருத்தை தெரிவித்திருந்தனர். இதுபற்றி நீல்சன் இந்தியா நிறுவன நிர்வாக இயக்குனர் (நுகர்வோர் பிரிவு) ஜஸ்டின் சார்ஜென்ட் கூறுகையில், பணவீக்க அதிகரிப்பு காரணமாக வாங்கும் சக்தியில் அவர்களிடம் தயக்கம் ஏற்பட்டுள்ளது. விலைவாசி உயர்வால் அவர்களது வாங்கும் பழக்கவழக்கங்களில் சிந்தனை மாறியுள்ளது என்றார்.